www.kalvikural.com

சுருக்கம்

பள்ளிக் கல்வி – மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு – புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்குதல், அப்பள்ளிகளுக்கு ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (அகஇ) துறை

அரசாணை (நிலை) எண் 200.

நாள் 02.12.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
கார்த்திகை 16

படிக்கப்பட்டவை

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.021786/கே4/2014, நாள் 04.08.2014.

*******

ஆணை :–

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30.07.2014 அன்று கீழ்க்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது :–

"கல்வியின் அடித்தளமாக விளங்குவது தொடக்கக் கல்வி என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்புக் கல்வியாண்டில் 25 மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகம் உள்ள 128 குடியிருப்புப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில், தலா ஒரு தொடக்கப் பள்ளி வீதம் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஓர் இடைநிலை ஆசிரியர் என மொத்தம் 256 ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இவ்வாறாக, தொடங்கப்படும் தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு சமைப்பதற்குத் தேவையான நவீன சமையலறை, குடிநீர் வசதியுடன் கூடிய கட்டடங்கள் மற்றும் கழிப்பிடங்கள் ஆகியவை ஏற்படுத்தித் தரப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு தோராயமாக 19 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்".

2. இது தொடர்பாக தொடக்கக் கல்வி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2014–15ஆம் கல்வியாண்டில் 25 மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகம் உள்ள 128 குடியிருப்புப் பகுதிகள் கண்டறியப்பட்டு மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன என்றும் இப்பகுதிகளில், 2014–2015ஆம் கல்வியாண்டில் 128 தொடக்கப் பள்ளிகள் துவக்குவதற்கும், இவ்வாறு துவக்கப்படும் புதிய தொடக்கப் பள்ளிகளில் பள்ளி ஒன்றுக்கு ரூ.5200–20200 + 2800 தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் வீதம் 128 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், ரூ.9300–34800+4500 தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 128 தலைமையாசிரியர் பணியிடங்களையும் தோற்றுவிக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வாறு புதிய பணியிடங்களைத் தோற்றுவிப்பதன் மூலம் ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ.1943.00 இலட்சம் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் 2014–2015–ம் ஆண்டிற்கான திட்ட ஒப்புதல் குழு (Project Approval Board) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகம் உள்ள 128 குடியிருப்புப் பகுதிகளில் 128 தொடக்கப் பள்ளிகளை துவங்குவதற்கும்,

www.kalvikural.com



(2)

அவ்வாறாக துவங்கப்படும் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு 2 ஆசிரியர் வீதம் 256 (2 x 128) ஆசிரியர்கள் நியமிப்பதற்கும், மேலும், 128 பள்ளிகளுக்கான கட்டடம் கட்டுவதற்கும் அதற்கான செலவின ரூபாய் 19.43 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் விதிமுறைப்படி இச்செலவினம் 65% மத்திய அரசின் பங்கு தொகையாகவும் 35% மாநில அரசின் பங்கு தொகையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது :–

i) பள்ளிகளில்லா 128 குடியிருப்புப் பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளி துவங்குவதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்யும் (இணைப்பில் கண்டுள்ளவாறு) 128 புதிய தொடக்கப் பள்ளிகள் 2014–2015ஆம் கல்வியாண்டில் துவங்க அனுமதி வழங்கப்படுகிறது.

ii) இவ்வாறு துவக்கப்படும் பள்ளி ஒன்றுக்கு ரூ.5200–20200+2800 தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் வீதம் 128 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படுகின்றன.

iii) இவ்வாறு துவங்கப்படும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9300–34800+4500 தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 128 தலைமையாசிரியர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படுகின்றன.

iv) இவ்வாறு புதியதாக தோற்றுவிக்கப்படும் மேற்காண் இடைநிலை ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படி நியமனம் செய்யப்பட வேண்டும்.

v) புதிதாக துவங்கப்படும் 128 பள்ளிகளுக்கும் புதிய பள்ளி கட்டடத்தை அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் வாயிலாக 19 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4–இல் புதிதாக தோற்றுவிக்கப்படும் ஆசிரியர் பணியிடங்களுக்கான சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"2202 பொதுக்கல்வி–01 தொடக்கக் கல்வி 101 – அரசு தொடக்கப் பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது – AD - அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குதல் – 01 சம்பளங்கள்"
**(த.தொ.கு 2202–01–101–AD-0109)**

6. இச்செலவினமானது, அனைவருக்கும் கல்வி (Sarva Shiksha Abhiyan) திட்ட நிதியிலிருந்து உடனுக்குடன் திரும்ப பெறப்பட்டு, கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:-

" 0202 கல்வி, போட்டி விளையாட்டுக்கள் கலையும் பண்பாடும் – 01 பொதுக் கல்வி –101 தொடக்கக் கல்வி – AA. ஏனைய வரவுகள் – 12 அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழான வரவுகள்"
**(த.தொ.கு 0202–01– 101–AA-1204)**

www.kalvikural.com



(3)

7. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவினம் ஒரு "புதுப் பணித் திட்டம்" (**New Services Scheme**) குறித்ததாக கருதப்படும். 2014–2015ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப்பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டபேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதி (**Contingency Fund**) முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு முன்பணம் ஒப்பளிப்புக்கான ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். உடனடிச் செலவுக்கான தொகையினை கணக்கிட்டு அதனை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெறுவதற்கான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் இருபடிகளில் நிதித் (வரவு செலவு பொது–1) துறைக்கு சமர்ப்பிக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2014–2015ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய நேரத்தில் தவறாது அரசுக்கு அனுப்பிட தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.67098/மை.ம.ஆ.பி/2014, நாள் 2.12.2012–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரட்டு எண் 1669 (ஆயிரத்து அறுநூற்று அறுபத்தொன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்:–
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக
உதவியாளர், சென்னை–9.
நிதித் (கல்வி–II/வரவு செலவு/பொது–I/பொது–II) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு–செலவு) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 2/12/14

www.kalvikural.com

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.
ந.க.எண்.021786/கே4/2014 நாள்.04.12.2014.

---

பொருள் - தொடக்கக் கல்வி – புதிய தொடக்கக் பள்ளிகள் – 2014–2015ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்குவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டது – தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் பெயர் பட்டியல் அனுப்புதல் – நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தக்க அறிவுரைகள் – வழங்குதல்

பார்வை - அரசாணை (நிலை) எண்.200 பள்ளிக் கல்வித் (அகஇ) துறை நாள்.02.12.2014

---

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் அனைவருக்கும் கல்வி எனும் மைய அரசின் திட்டத்தின் கீழ் 2014–2015ஆம் கல்வியாண்டிற்கு பள்ளிகளில்லா 128 குடியிருப்புப் பகுதிகளில் 27 மாவட்டங்களில் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்குவதற்கும் ஆசிரியர் பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்தும், அப்புதிய பள்ளிகளுக்கு அனைவருக்கும் கல்வி திட்டத்தின் வாயிலாக பள்ளிக் கட்டிடங்கள் கட்டித் தருவதற்கும் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசாணையின் நகலுடன் புதிய தொடக்கப் பள்ளிகள் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்குவது சார்ந்து பின் வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

- புதிய தொடக்கப்பள்ளிகள் துவக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்படுவதை குறித்து உறுதி செய்துக் கொள்ளவேண்டும்.

- புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு ரூ.5200–20200+2800 என்ற ஊதிய விகிதத்தில் 1 இடைநிலை ஆசிரியர் பணியிடம் வீதமும் மற்றும் ரூ.9300–34800+4500 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் ஒரு தலைமை ஆசிரியர் பணியிடம் வீதமும் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இப்பணியிட எண்ணிக்கை விவரத்தினை மாவட்ட அளவில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் அளவை பதிவேட்டிலும், ஒன்றிய அளவில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டுவரும் அளவை பதிவேட்டிலும் மற்றும் சார்ந்த பள்ளிகளின் அளவைப் பதிவேட்டிலும் பதிவுகள் செய்துக்கொள்ளவேண்டும்.

- புதிய தொடக்கப்பள்ளிகளுக்கு ஆசிரியர் பணியிடங்கள் அரசாணையில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டிருப்பினும், அப்பணியிடங்கள் துறையால் நிரப்பப்படும் வரை வகுப்புகள் இயங்கிட ஏதுவாக மாற்றுப்பணியின் வாயிலாக ஆசிரியர்கள் பணிபுரியத் தக்க நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

- பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு அரசின் நலத்திட்டங்களான விலையில்லாப் பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சீருடைகள், மதிய உணவு, பேருந்து பயண அட்டை, வண்ணக்கிரையான்/வண்ணப்பென்சில்கள், புத்தகப்பைகள், காலணிகள், கம்பளிச் சட்டைகள் போன்ற அனைத்து அரசின் நலத்திட்டங்களும் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

- புதிய தொடக்கப்பள்ளிகளுக்கு, பள்ளிக் கட்டிடம் அனைவருக்கும் கல்வி நிதியினை கொண்டு கட்டித் தர அரசாணையில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக அனைவருக்கும் கல்வி முதன்மைக் கல்வி அலுவலரை தொடர்பு கொண்டு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

www.kalvikural.com

மேற்காண் அறிவுரைகளை உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் / கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு வழங்குவதுடன், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் இவற்றை தவறாது கண்காணிக்கும் பொறுப்புடையவர்கள் ஆவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்ட விவரத்தினை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பிவைக்குமாறும் இச்செயல்முறைகள் பெற்றுக்கொண்டதற்கு ஒப்புதலை மறு அஞ்சலில் அனுப்பிவைக்குமாறும் சார்ந்த மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக

இணைப்பு : அரசாணை நகல்கள்

பெறுநர்
மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்
கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுகல், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி
மதுரை, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை,
தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பூர், திருவள்ளூர், திருவாரூர்,
திருவண்ணாமலை, தூத்துகுடி, வேலூர்,
விழுப்புரம், விருதுநகர்.

நகல் : மாநிலத் திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6
அவர்களுக்கு பணிந்தனுப்பலாகிறது.

நகல் : இவ்வியக்க சி மற்றும் டி பிரிவுகள்

படிவம்

**அரசாணை (நிலை) எண்.200 பள்ளிக் கல்வித் (அகஇ) துறை நாள்.02.12.2014 ன்படி அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2014–2015ஆம் கல்வியாண்டில் புதிய தொடக்கப்பள்ளிகள் துவக்கப்பட்ட அறிக்கை**

மாவட்டம் :

| வ.எண். | ஒன்றியம் | பள்ளியின் பெயர் ஊராட்சி ஒன்றிய/நகராட்சி | புதிய தொடக்கப்பள்ளிகள் துவக்கப்பட்ட நாள் | பள்ளிக்கு நிரந்தர கட்டிடம் கட்டும் வரை தற்போது தற்காலிகமாக பள்ளி இயங்கி வரும் இடம் | சேர்க்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்